# சங்கத் தமிழில் அறிவியல்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள்)


பதிப்பாசிரியர்

பேரா. மு. துர்காதேவி




## தமிழ்த்துறை


தியாகி தர்மக்கண் அமிர்தம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கன்னிராசபுரம்




| | |
|---|---|
| நூல் | : சங்கத் தமிழில் அறிவியல் |
| பதிப்பாசிரியர் | : பேரா.மு.துர்காதேவி |
| முதற்பதிப்பு | : டிசம்பர் 2016 |
| வெளியீடு | : பாலபாரதி பதிப்பகம், சிவகாசி. |
| பக்கங்கள் | : 404 + 12 |
| ஒளியச்சு | : நான்சி கணினியகம், பாளையங்கோட்டை. |
| அச்சு | : முத்துலெட்சுமி அச்சகம், பாளையங்கோட்டை. |
| ISBN | : 978-81-909440-9-0 |

ISBN:978-81-909440-9-0

57. சங்க இலக்கியங்களில் இயற்கையும், இன்றைய நிலையும் ........285
*அ.மதிப்பிரியா*

58. நெடுந்தொகையில் யானைகள் ........290
*பேரா.சகோ.ஆ.மரிய சாந்தி*

59. குறுந்தொகையில் குரங்கின் விளக்கம் ........297
*க.முத்துச்செல்வி*

60. பரிபாடலில் நீர்வளம் ........302
*மொ.முருகலெட்சுமி*

61. நற்றிணையில் தாவரங்கள் வழி வாழ்வியல் ........305
*ஆ.மெர்சி ஆஞ்சலா*

62. அகநானூற்றில் விலங்குகள் ........310
*பா.மேரி*

63. புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் ........314
*மு.ரவி*

64. நற்றிணையில் சுற்றுப்புறச் சூழல் ........320
*பா.ராதா*

65. நெடுந்தொகையில் நிலநீர் வாழ் உயிரினங்கள் ........325
*உ.ரேகா*

66. முல்லைத் திணைப் பாடல்களில் உயிரியல் ........331
*முனைவர்.க.லதா*

67. பட்டினப்பாலையில் அறிவியல் சிந்தனைகள் ........336
*பி.வசந்தி*

68. குறுந்தொகையில் மெய்ப்பாடுகள் ........341
*பெ.வித்யா*

69. சங்க இலக்கியங்களில் பறவைகள், விலங்குகள் ........348
*ச.விவேகா*

70. சங்க இலக்கியத்தில் மான் ........352
*லி. விஷ்ணுப் பிரியா*

71. சங்க இலக்கியத்தில் வானியல் ........356
*முனைவர்.அ.விஜயலட்சுமி*

# நற்றிணையில் தாவரங்கள் வழி வாழ்வியல்

*ஆ.மெர்சி ஆஞ்சலா,*
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*பாத்திமாகல்லூரி,*
*மதுரை.*

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று நற்றிணை. இதனுள் அமைந்த பாடல்களில் இயற்கை சார்ந்த கருவுக்குப் பொருத்தமான வருணனைகளும் இயற்கையோடு சூழ்ந்த அவர்களது வாழ்க்கை முறைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் வாழ்க்கையில் தாவரங்கள் நெருங்கியதொடர்புடையனவாக இருப்பதால் அதனைப் பாடல்களில் கையாளுகின்றனர். தாவரங்கள் வழி மக்களின் வாழ்வியலை ஆய்ந்து கூறுவதே இக்கட்டுரையாகும்.

## இயற்கையின் எழில், வளம் கூட்டும் தாவரங்கள்

மக்கள் இயற்கையுடன் அடிக்கடி தொடர்பு கொள்வதால் இயற்கையுடன் நேசத்தோடு வாழ்ந்தனர். தாவரங்கள் இயற்கை எழில் நலத்தைக் கூட்டுவதோடு அவர்களது வாழ்வின் வளமைக்கும் காரணமாக அமைகிறது. உயர்ந்த மலைப் பக்கத்தே வேங்கை மலரின் தாது பொன் போல் உதிர்ந்து விழுகிறது. பசுமையான கணுக்களை உடைய அசையும் மூங்கில்கள் மேகத்தின் அடிமுடிகளைத் தழுவுகின்றன என்ற வரிகள் அவ்வூரின் எழில் நலத்தைத் தெளிவிக்கின்றது.

நெய்தல் நிலமானது ஞாழல் மரங்களால் சூழப்பட்டுள்ளது. சிறிய மலர்களை உதிர்க்கும் ஞாழல் மரம் சூழ்ந்த கடற்கரைக்குத் தலைவன் என்பது தலைவனது ஊர் பற்றிய வருணனையாகும்.